தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை
1999-2000

தமிழ்நாடு அரசு அச்சுத்துறை இயக்குநரால் தமிழ்நாடு அரசுக்காக பதிப்பிக்கப்பெற்றது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை 1999 - 2000

115-86—1

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை 1999-2000

பொருளடக்கம்

வரிசை எண்.	பொருள்	பக்கம்
(1)	(2)	(3)
1	செயல்களும் கடமைகளும்	1 - 4
2	நேரடித் தேர்வுகள்	4 - 6
3	தகுதியும் பொருத்தமும் உடைய வேட்பாளர்கள் இல்லாமை	6
4	பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள், சட்ட முறை ஒழுங்கு முறை விதிகள், தற்காலிக நியமனங்கள், விதி தளர்த்தல் முதலியன	6 – 9
5	தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள்	9
6	அரசும் தேர்வாணையமும்	10 – 12
	பின் இணைப்புகள்	
1	தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்	13
2	நேரடித் தேர்வு வெளியிடப்பட்ட முடிவுகள் புள்ளி விவரம்	14 – 16
3	வருவாய் மற்றும் செலவு	17
4	வெளியான அறிவிக்கை விளம்பரங்கள்	18 – 20
5	எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு விவரம்	21 – 29
6	பொருத்தமும் தகுதியும் உடைய வேட்பாளர்கள் இல்லாத பணிகள் குறித்து விவரம்	30
7	பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பதவிகள்	31 – 33
8	ஒழுங்கு நடவடிக்கைகள், மனுக்கள் மற்றும் முறையீகள் விவரம்	34 – 35
9	தேர்வாணையத்தின் ஒழுங்கு முறை விதி 1954 விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள், முறைப்படுத்தியதன் விவரம்	36 – 37
10	தற்காலிக நியமனங்கள் மாநிலப் பணி-சார்நிலைப் பணி-அமைச்சுப் பணிகள் 24 மாதங்களுக்கு மேல் இசைவு அளித்த விவரம்	38
11	அரசுத் தேர்வாணைத்தின் கருத்திலிருந்து மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கப்படாதவை குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான புள்ளி விவரம்	38

115-86—1a

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

1999-2000 ம் ஆண்டு ஆண்டறிக்கை

முன்னுரை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசியலமைப்புப் பிரிவு 315-இன் படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் ஒருவர், உறுப்பினர்-11 என்பது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். தற்போது தலைவரும், எட்டு உறுப்பினர்களும் உள்ளனர்.
இவ்வாண்டிற்கான தேர்வாணையத்தின் கூட்டமைப்புக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

திரு.	து. முருகராஜ், இ.ஆ.ப. (ஓய்வு)	தலைவர்
திரு.	ஆர்.வேலு, இ.ஆ.ப. (ஓய்வு)	உறுப்பினர்
திரு.	ஆர். குருசாமி, பிஏ. பி. எல். ,	உறுப்பினர்
பேராசிரியர்.	ஜி. அரங்கநாதன், எம்.ஏ.எம்.பில்.	உறுப்பினர்
பேராசிரியர்.	டாக்டர் எஸ். பாலசுப்பிரமணியன், எம்.ஏ, எம்.பில்., பிஎச்.டி., டி.எஸ்.எஸ்	உறுப்பினர்
திரு,	எம். நாகூர்மீரான், பி.எஸ்.ஸி.,பி.எல்	உறுப்பினர்
டாக்டர்	(திருமதி) ஜோதிபாய் செல்வின் ராஜ், எம்.எஸ்.சி., எம்.எட்,.பி.எச்.டி..,	உறுப்பினர்
திரு.	ஆர். சுந்தரம், பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு.	எம். மணி, இ.கா.ப (ஓய்வு)	உறுப்பினர்
திரு.	மா.ரா. மோகன், இ.ஆ.ப., (14.02.2000 பிற்பகல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்)	செயலாளர்
திரு.	அசோக் ரஞ்சன் மஹாந்தி, இ.ஆ.ப., (6.03.2000 முற்பகல் பணியேற்றார்)	செயலாளர்
திரு.	த.நா. இராமநாதன், இ.ஆ.ப, (20.05.99 பிற்பகல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்)	தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்
திரு	ஒட்டம் டாய், இ.ஆ.ப, (20.05.99 பிற்பகல் பணியேற்றார்)	தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

மார்ச் 31, 2000-இன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விபரம் பின் இணைப்பு -1 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

பகுதி - 1

செயல்களும் கடமைகளும் :

தேர்வாணையம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதன் விபரங்கள் இந்திய அரசியல் அமைப்புப் பிரிவு 320-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநிலப் பணிகளில் பணி நியமனம் பெற உரிய தேர்வுகளைத் தேர்வாணையம் நடத்த வேண்டும். மேலும் மாநில அரசு, தன் பணியாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும், பணி விதிகள் உருவாக்குதல் மற்றும் மாற்றம் செய்தல், ஒரு பதவிக்கு, பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், பணியாளர்களுக்குப் பணிக்காலத்தில் ஏற்படும் செலவினம் மற்றும் தீங்குகளுக்கான இழப்பீடு வழங்குவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்தும் தேர்வாணையத்தினைக் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகின்றது. இந்திய அரசுப் பாதுகாப்புத்துறை சார்பாக டேராடூனில் உள்ள இந்தியப் பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளியில் சேருவதற்கான தேர்வையும் தேர்வாணையம் நடத்துகின்றது.

வேலைப் பளு :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப்பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

I. நேரடித் தேர்வு :

1. முதல் நிலைத் தேர்வு -

தேர்வுகளின் எண்ணிக்கை	1
காலியிடங்களின் எண்ணிக்கை	46
பெறப்பட்ட விண்ணப்பங்கள்	46,400
முதன்மைத் தேர்விற்குப் பரிந்துரை செய்யப்பட்டவர்கள்	460

2. முதன்மை எழுத்துத் தேர்வு -

தேர்வுகளின் எண்ணிக்கை	49
காலியிடங்களின் எண்ணிக்கை	6,543
தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்	9,32,499

3. நேர்முகத் தேர்வு -

தேர்வுகளின் எண்ணிக்கை	34
காலியிடங்களின் எண்ணிக்கை	1,715
தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்	6,785

4. இறுதி நிலைத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்கள் -

முடிவு செய்த தேர்வுகளின் எண்ணிக்கை	30
காலியிடங்களின் எண்ணிக்கை	1,545
பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	1,32,841
முதல்நிலைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள்	61,809
முதன்மை எழுத்துத் தேர்வில் கலந்து கொண்டவர்கள்	20,784
வாய்மொழித் தேர்வில் கலந்து கொண்டவர்கள்	4,203
தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	1,533

II. இதர தேர்வு விவரங்கள்

	1999	
1. துறைத் தேர்வு	மே	டிசம்பர்
விண்ணப்பதாரரின் எண்ணிக்கை	54,983	60,732
வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை	15,567	17,204

2. அரையாண்டுத் தேர்வு

1999 ஆம் ஆண்டு செப்டம்பர் தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை	59
2000 ம் ஆண்டு மார்ச் தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை	29

3. கல்வித் தகுதி / வயது முதலியவற்றில் விதி தளர்த்தியது . 25 நேர்வுகள்.

4. பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல் . 1233 நபர்கள்.

5. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல் - அமைச்சுப் பணியில் . 210 நபர்கள்.

6. ஒழுங்கு நடவடிக்கை தேர்வாணையம் கருத்து தெரிவித்த வழக்குகள் 383 நேர்வுகள்.

7. ஒழுங்கு முறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனம் செய்தவை 735 நேர்வுகள்.

8. வரவு மற்றும் செலவு (ரூபாய் ஆயிரங்களில்)

வரவு	2,79,36
செலவு	14,99,69

வரவு மற்றும் செலவின விவரங்கள் பின் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

9. **அறிவிக்கைகள் :**

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணயம் மாநிலத்தில் பல்வேறு பணிகளில் 47 பதவிகளுக்கான காலியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி 29 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. இவ்வாறு வெளியிடப்பட்ட 47 பதவிகளுக்கான அறிவிக்கைப் பட்டியல், மற்றும் 4,667 காலியிடங்களின் எண்ணிக்கையுடன் உள்ள விவரங்கள் பின் இணைப்பு - 4 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

10. சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள் :

I. வாய் மொழித் தேர்விற்கு விண்ணப்பதாரர்களை அனுமதிப்பது தொடர்பான நடைமுறை

தற்போது நடை முறையில் வாய் மொழித் தேர்விற்கு விண்ணப்பதாரர்களை, அனுமதிக்கும் நடைமுறை ஏதேனும் ஒரு இனப் பிரிவில் (ஆதி, பழ, மி.பி.வ., பி.வ., பொது போட்டி) காலியிடங்களின் எண்ணிக்கை நான்கும் அதற்கும் குறைவாக இருந்தால் அந்த இனப்பிரிவும் மற்ற இனப்பிரிவிற்கும் காலியிடங்களின் எண்ணிக்கைக்கு 1.3 என்ற விகிதத்தில் விண்ணப்பதாரர்களை அவர்கள் எழுத்துத்தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் அனுமதிக்கப்படுகின்றனர். அவ்வாறு இல்லையேனில் அனைத்து இனப் பிரிவிலும் காலியிடங்களின் எண்ணிக்கை ஐந்தும் அதற்கு மேலும் இருந்தால் 1.2 என்ற விகிதத்தில் விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இந்த நடைமுறையினால் சில பதவிகளுக்கு மிக அதிக

எண்ணிக்கையில் விண்ணப்பதாரர்களை அனுமதிக்க வேண்டியுள்ளது. அதை நீக்கும் பொருட்டு தேர்வாணையம் முன்னர் இருந்த நடை முறையைப் பின் வருமாறு மாற்றியுள்ளது. எந்தெந்த இனப்பிரிவில் (ஆதி, பழ, மி.பி.வ., பி.வ., பொதுப் போட்டி) காலியிடங்களில் எண்ணிக்கை ஐந்தும் அதற்கு மேலும் உள்ளதோ அந்த இனப் பிரிவின் காலியிடங்களின் எண்ணிக்கைக்கு 12 என்ற விகிதத்தில் விண்ணப்பதாரர்களை அனுமதிப்பது என்றும், அதே தெரிவில் காலியிடங்களின் எண்ணிக்கை நான்கும் அதற்குக் குறைவாக உள்ள இனப் பிரிவிற்கு மட்டும் 13 என்ற விகிதத்தில் விண்ணப்பதாரர்களை அனுமதிப்பது எனவும் முடிவு மேற்க் கொள்ளப்பட்டுள்ளது.

II. OMR விண்ணப்பப் படிவம்

தேர்வாணையம் அனைத்து நேரடித் தெரிவுப் பணிக்கும் பொதுவான OMR கணிப்பொறி மூலம் பதிவுச் செய்யப் படும் விண்ணப்பத்தை அறிமுகம் செய்துள்ளது. அந்த விண்ணப்ப படிவம் ஒரே தாளில் வேண்டிய விவரங்கள் அடங்கியதாகவும் அதைக் கணிப் பொறி ஒளிப்புகும் எந்திரம் மூலம் பரிசீலனை செய்யப்படுவதாகவும் அமையும். இம்முறையினால் ஆட்கள் மூலம் விவரங்களைப் பதிவு செய்வதைவிட விரைவாகப்பதிவு செய்யவும் மற்றும் பரிசீலிக்கவும், அதில் உள்ள விவரங்களை விரைந்து எடுக்கவும் முடியும். மேலும் இதில் சரியாகவும், விரைவாகவும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து விண்ணப்பதாரர்களை விரைவாகத் தேர்விற்கு அனுமதிப்பது, வருகைப் பதிவேடு, ஆளறிச்சான்றிதழ், கையொப்பம் மற்றும் பெயர்ப் பதிவேடு முதலியன விரைவாகத் தயார் செய்யவும் முடியும். இம் முறையில் அதிக விண்ணப்பங்களை எந்திரம் மூலம் குறைந்த நேரத்தில் பரிசீலனை செய்வதுடன் வேண்டிய விவரங்களை விரைவில் தயார் செய்வதாலும் நேரம் குறைப்பதுடன் அனுமதிச்சீட்டு போன்றவை குறைந்த நேரத்தில் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பவும் முடியும். இதன் முக்கிய பயன்கள் சரிநிலை, பாதுகாப்பு, பகுப்பாய்வு செய்தல், கொள்திறன் மற்றும் சிக்கனம் ஆகியவையாகும். இந்த விண்ணப்பங்கள் தமிழ் நாட்டில் உள்ள 90 தலைமை தபால் அலுவலகங்கள் மூலம் வழங்குவதுடன் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்திலும் வழங்கப்படும். இதனால் விண்ணப்பதாரர்கள் அருகில் உள்ள தபால் நிலையத்திலேயே அறிவிக்கை வந்த அன்றே விண்ணப்பத்தை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

III. கணிப் பொறி OMR விடைத்தாள் இருமுறை மதிப்பீடு செய்தல்

கணிப்பொறி மூலம் கணினிகள் கொண்டு OMR விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.. ஒரு கணினி மூலம் மதிப்பீடு செய்யப்படும் விடைத்தாள்கள் சரிபார்க்கும் பொருட்டு வேறொரு கணினி மூலம் மறுமதிப்பீடு செய்யப்படுகிறது.

பகுதி - 2

நேரடித் தெரிவுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் 46 காலியிடங்களுக்கான ஒரு தெரிவிற்கு முதல் நிலைத் தேர்வுகள் நடத்தப்பட்டது. 46,400 விண்ணப்பதாரர்கள் முதல்நிலைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். 6543 காலியிடங்களுக்கான 49 தெரிவுகளில் முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. 9,32,499 விண்ணப்பதாரர்கள் முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். 1715 காலியிடங்கள் அடங்கிய 34 தெரிவிற்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. 6,785 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். தேர்வாணையம் இறுதியாக 30 தெரிவுகளுக்கு முடிவினை அறிவித்தது. 1545 காலியிடங்களுக்கு இறுதியாக 1533 விண்ணப்பதாரர்களை தெரிவு செய்தது. இறுதி முடிவு செய்த 30 தெரிவுகளின் புள்ளி விவரம் பின் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கைக்குரிய ஆண்டில் முடிக்கப்பட்ட சில முக்கியப் பதவிகளின் தெரிவு விபரம்

வரிசை எண் (1)	பதவியின் பெயர் (2)	காலியிடங்களின் எண்ணிக்கை (3)	தெரிவு செய்யப்பட்ட நபர்கள் (4)
1	உதவி அறுவை மருத்துவர் (பொது)	250	249
2	உரிமையியல் நீதிபதி	73	68
3	உதவிப் புள்ளியியல் ஆய்வாளர்	165	165
4	அறிவியல் உதவியாளர் நிலை - II	53	52

5	தொகுதி எட்டு பணிகள்	62	62
6	உரிமையியல் நீதிபதி	52	50
7	ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் - I	602	602

தொகுதிப் பணிகள்

தொகுதி ஒன்று பணிகள்

(அ) தேர்வாணையம் தொகுதி ஒன்று பணியில் 42 காலியிடங்களுக்கு 7.7.97 அன்று விளம்பரப்படுத்தியது. 46,193 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதல்நிலைத் தேர்வு 14-09-97 அன்று நடைபெற்றது. முதன்மை எழுத்துத் தேர்வு 19.5.98 முதல் 12.6.98 வரை நடைபெற்றது. வாய்மொழித் தேர்வு 11.3.99 முதல் 15.3.99 வரை நடைபெற்றது. இறுதியாக 42 நபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஆ) தொகுதி ஒன்றில் அடங்கிய பதவிகளுக்கான 84 பணியிடங்களுக்கு 7.1.98 அன்று விளம்பரப்படுத்தப்பட்டு, 67,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதனிலை தேர்வு 07.06.1998 அன்று நடைபெற்றது முதன்மைத் தேர்வு 14.12.98 முதல் 13.1.99 வரை நடைபெற்றது. வாய் மொழித் தேர்வு 23.11.99 முதல் 4.12.99 வரை நடைபெற்றது.

(இ) தேர்வாணையம் தொகுதி ஒன்று பணியில் 46 காலியிடங்களுக்கு 12.12.98 அன்று விளம்பரப்படுத்தியது. 46,650 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதல்நிலைத் தேர்வு 6.6.99 அன்று நடைபெற்றது. முதன்மைத் தேர்வு 6.12.99 முதல் 30.12.99 வரை நடைபெற்றது.

(ஈ) தேர்வாணையம் தொகுதி ஒன்று பணியில் 74 காலியிடங்களுக்கு 21.12.99 அன்று விளம்பரம் படுத்தியது. 75, 158 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதல் நிலைத்தேர்வு 11.06.2000 அன்று நடைபெற்றது.

ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் - I :

(அ) தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள்-I ல் 1617 காலியிடங்களை நிரப்ப 1-8-98 அன்று விளம்பரப்படுத்தியது, அதற்கு 1,31,719 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதன்மைத் தேர்வு 17.5.99 முதல் 19.5.99 வரை நடைபெற்றது.

(ஆ) தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள்- I ல் 72 காலியிடங்களை நிரப்ப 8.7.99 அன்று விளம்பரப்படுத்தியது. அதற்கு 23,742 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதன்மைத் தேர்வு 23.10.99 முதல் 25.10.99 வரை நடைபெற்றது.

ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் - II :

(அ) தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் - II ல் 88 காலியிடங்களை நிரப்ப 08.08.98 அன்று விளம்பரப்படுத்தியது. அதற்கு 45,534 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதன்மைத் தேர்வு 8.5.99 முதல் 16.5.99 வரை நடைபெற்றது.

தொகுதி நான்கு பணிகள் :

(அ) தேர்வாணையம் தொகுதி நான்கில் உள்ள பணியில் இளநிலை உதவியாளர் உடன்கலந்த தட்டச்சர் பதவிக்கு 3211 காலியிடங்களுக்கு 5.10.98 அன்று விளம்பரபடுத்தியது. 4,25,500 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதன்மை எழுத்துத் தேர்வு 31.1.99 அன்று நடைபெற்றது. இறுதியாக 3211 விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஆ) தேர்வாணையம் தொகுதி நான்கு பணியில் இளநிலை உதவியாளர் உடன்கலந்த தட்டச்சர் பதவிக்கு 2,153 காலியிடங்களுக்கு 7.10.99 அன்று விளம்பரப்படுத்தியது. 4,05,925 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதன்மை எழுத்துத் தேர்வு 6.2.2000 அன்று நடைபெற்றது.

முதல் நிலைத் தேர்வுகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் ஒரு பணிக்கு 46 காலியிடங்களை நிரப்ப முதல்நிலைத் தேர்வு நடத்தப்பட்டது. 46,400 விண்ணப்பதாரர்கள் முதல்நிலைத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர்.

முதன்மை எழுத்துத் தேர்வுகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 6543 காலியிடங்களை நிரப்புவதற்கு 49 முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 9,32,499 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர்

வாய்மொழித் தேர்வுகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வேறு பதவிகளில் 1715 காலியிடங்களை நிரப்ப 34 பதவிகளுக்கு வாய்மொழித் தேர்வுகள் நடந்தப்பட்டன. நடப்பு ஆண்டில் 111 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. நேர்முகத் தேர்வுகளை முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடந்தன. சில நாட்களில் அதிகபட்சமான 9 குழுமங்கள் முற்பகலும் மற்றும் பிற்பகலும் இயங்கின. மொத்தம் 476 நேர்முகத் தொடர்கள் நடந்தப்பட்டன 6785 விண்ணப்பத்தாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.
1999-2000 ஆண்டில் நடந்த முதல்நிலை, முதன்மை எழுத்துத் தேர்வுகள் மற்றும் வாய் மொழித் தேர்வின் விபரங்கள் பின் இணைப்பு 5-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

பகுதி-3

தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாத பதவிகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் 12 காலியிடங்களுக்குத் தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையால் அவை நிரப்படவில்லை.

வ.எண்	பதவியின் பெயர்	ஆதி	பழ	மி.பி.வ.	பி.வ	பொ.போ	மொத்தம்
1	உதவி அறுவை மருத்துவர்	-	1	-	-	-	1
2	உரிமையியல் நீதிபதி	-	1	4*	-	-	5
3	உரிமையியல் நீதிபதி	-	2	-	-	-	2
4	தொகுதி நான்கு பணிகள் (சுருக்கெழுத்து தட்டச்சர்) (ஆதிதிராவிடர்களுக்கான தனித்தேர்வு)	2	-	-	-	-	2
5	அறிவியியல் உதவியாளர் நிலை-II	-	1	-	-	-	1
6	உதவிஆய்வாளர் தொழில்கள்	-	-	1	-	-	1
	கூடுதல்	2	5	5	-	-	12

இதன் விபரம் பின் இணைப்பு - 6 ல் கொடுக்கப்பட்டுள்ளது.
*மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 4 காலியிடங்கள் அடுத்த தெரிவில் தெரிவு செய்யப்பட்டது.

பகுதி - 4

1. பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவு செய்தல் :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலப் பணிகளில் தொடர்புடைய சார் நிலைப் பணிகளிலிருந்து பணி மாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்து குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் 24 பணிகளில் 1233 தகுதியும் பொருத்தமும் உடைய நபர்களைத் தெரிவு செய்தது. இதன் விபரம் பின் இணைப்பு 7-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள் முதலியன :

அ.	1.	செயல்நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள் (சென்ற ஆண்டு ஏப்ரல் திங்கள் 1999-ல் நிலுவையில் இருந்த 56 வழக்குகள் உட்பட)	920
	2.	அ. தேர்வாணையம் கருத்துத் தெரிவித்த வழக்குகள்	391
		ஆ. தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள்	316
		இ. உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பியது.	34
		ஈ. சில ஆவணங்கள் அல்லது விபரங்கள் அரசிடம் கேட்கப் பட்ட வழக்குகள்	179

3. வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்ட வழக்குகள் 28

ஆ.	I)	அரசுக்குத் தேர்வாணைத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட வழக்குகள்	383
	II)	அவற்றில் அரசு நடவடிக்கை எடுத்து ஆணைப்பிறப்பித்த வழக்குகள்	168
	III)	அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள்	215

இ. ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் காலச் செலவழிவு

1)	மொத்த வழக்குகளின் எண்ணிக்கை	168	
		மாதம்	நாட்கள்
2)	குற்றச்சாட்டு குறிப்பாணை அனுப்பிய நாளில் இருந்து தேர்வாணையத்திற்கு அதன் கருத்தைக்கோர அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம்	12	18
3)	தேர்வாணையம் அரசுக்கு தனது கருத்தைத் தெரிவிக்க எடுத்துக் கொண்ட சராசரிக் காலம்	2	10
4)	தேர்வாணையம் தனது கருத்தினை அனுப்பிய பிறகு ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம்	7	9
	எடுத்துக் கொண்ட(கொள்ளப்பட்ட) மொத்த சராசரிக் காலம்	22	07

மேல்முறையீட்டு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு இவைகளில் அலுவலர்களைத் தமது நேர்மைக்கு புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள்கொண்ட வழக்குகள் என 383 வழக்குகளின் விபரம் பின் இணைப்பு 8-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்டு 735 நிகழ்வுகளில் மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. எந்த நிகழ்விலும் தேர்வாணையம் தன் இசைவினை மறுக்கவில்லை.

வரிசை எண் (1)	பணி வகை (2)	இசைவு அளிக்கப்பட்டவை (3)	இசைவு மறுக்கப்பட்டவை (4)
1.	மாநிலப் பணி	-	-
2.	சார்நிலைப் பணி	-	-
3.	அமைச்சுப்பணி	735	-
	கூடுதல்	735	-

எப்பணிகளில் எந்தெந்தப் பதவிக்கு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் பின் இணைப்பு 9 - ல் கொடுக்கப்பட்டுள்ளது.

4. தற்காலிக நியமனங்கள்

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாநிலத்தின் பல்வகைப் பணிகளில் பல்வகைப் பதவிகளுக்கு 45 நபர்களைத் தற்காலிகமாக நியமனம் செய்து அந்நியமனங்கள் 24 மாதங்கள் வரை தொடர்வதற்குத் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்டுள்ளது. 25 நபர்களின் நியமனம் 24 மாதங்களுக்கு மேல் தொடர அனுமதிக்கப்பட்டது.

காலம்	இசைவு அளிக்கப்பட்டது		இசைவு மறுக்கப்பட்டது	
	மாநிலப் பணிகள்	சார்நிலை/ அமைச்சுப் பணிகள்	மாநிலப் பணிகள்	சார்நிலை/ அமைச்சுப் பணிகள்
(1)	(2)	(3)	(4)	(5)
3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள்	1	17	-	-
12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள்	20	1	-	-
18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள்	-	6	-	-
24 மாதங்களுக்கு மேல்	6	19	-	-
கூடுதல்	27	43	-	-

24 மாதங்களுக்கு மேலும் தற்காலிக நியமனங்கள் தொடரத் தேர்வாணையம் 25 நேர்வுகளில் இசைவு அளித்தமை குறித்த விபரங்கள் பின் இணைப்பு 10-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

5. விதி 20 (எ) (3)-ன் படி இசைவு அளிக்கப்பட்டவை.

தமிழ்நாடு அமைச்சுப் பணிச்சிறப்பு விதி 20 (எ) (3) -ன் படி அமைச்சுப் பணியில் மாநிலத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்குத் தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 210 ஆகும். மற்றும் ஒரு நேர்வில் இசைவு மறுக்கப்பட்டுள்ளது.

6. விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்

அரசால் 115 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 111 நேர்வுகளில் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது. 4 நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்து கேட்டறியப்படவில்லை. அவை தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்கு உட்படாதவையாகவோ அல்லது இந்திய அரசியல் அமைப்பு 320 (3) -ன் படி தேர்வாணையத்தினைக் கலந்தறியத் தேவையில்லாதவையாகவோ அமைந்துள்ளன.

7. விதி தளர்த்துதல்

அறிக்கைக்குரிய ஆண்டில் 25 நேர்வுகளில் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டன. இரண்டு நேர்வில் ஒய்வூதிய விதிகளைத் தளர்த்தி ஆணையிட்டுள்ளது. அடிப்படை விதிகள் தமிழ்நாடு சிறப்பு ஊதியப்படி விதிகள் மற்றும் பயணப்படி விதிகள் ஆகியவற்றில் எந்த நேர்விலும் விதியைத் தளர்த்தி ஆணையிடவில்லை. மேலும் எந்த நேர்விலும் மதராஸ் பொது வருங்கால வைப்பு விதிகளைத்தளர்த்தி ஆணையிடப்படவில்லை.

பகுதி - 5

<u>தெரிவுத் தேர்வுகள் தவிர இதரத் தேர்வுகள்</u>

1) துறைத் தேர்வுகள்

1999- ஆம் ஆண்டு மே மற்றும் நவம்பர்த் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 273 பாடங்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன.,

1999 துறைத் தேர்வு

விபரம்		மே	டிசம்பர்
1.	மொத்த பாடங்கள்	142	131
2	தேர்வு தாட்களின் எண்ணிக்கை	140	129
3	விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை	54,983	60,732
4	மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாட்கள்	40,388	43,776
5	தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை	15,567	17,204
6	தேர்ச்சி சதவீதம்	38	39

2) அரையாண்டுத் தேர்வுகள்

உதவி ஆட்சியாளர், துணைஆட்சியாளர், காவல் துறை அலுவலர் மற்றும் வனத்துறை அலுவலர் ஆகியோருக்கான அரையாண்டுத் தேர்வு மற்றும் முதல்நிலைத் தமிழ் மொழித் தேர்வு செப்டம்பர் 1999 மற்றும் மார்ச் 2000 -ல் நடத்தப்பட்டன. இவற்றில் முறையே 59 மற்றும் 29 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

3) சிறப்புத் தமிழ்த் தேர்வு

தமிழைத் தாய்மொழியாக பெறாத அகில இந்தியப் பணியைச் சேர்ந்த அலுவலர்களுக்கான சிறப்புத் தமிழ்த் தேர்வு செப்டம்பர்-1999-ல் விளம்பரப்படுத்தப்பட்டது. அதற்கு ஒருவரும் விண்ணப்பிக்கவில்லை.

4) டேராடுன் இந்தியப் பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளியில் சேருவதற்கான தேர்வை இத்தேர்வாணையம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக ஆகஸ்டு 1999 மற்றும் பிப்ரவரி 2000-ல் தேர்வை நடத்தியது. அதற்கு 245 மற்றும் 94 மாணவர்கள் முறையே விண்ணப்பித்தனர்.

பகுதி - 6

அ. தேர்வாணையக் கருத்தை அரசு ஏற்காமை

அறிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தில் கருத்துரையில் இருந்து 3 வழக்குகளில் மாறுபட்டுள்ளது. இதன் விவரங்கள் பின்வருமாறு -

வழக்கு - 1

1997 - ம் ஆண்டு, ஆகஸ்டு திங்களில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, அரசு அறிஞர் அண்ணா நினைவுப் புற்றுநோய் மருத்துவமனை, காஞ்சிபுரத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர் (முன்னர் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் உதவி அறுவைச் சிகிச்சைப் பேராசிரியராகப் பணிபுரிந்த மருத்துவர்) செய்த மேல்முறையீட்டின் மீது அரசுத் தேர்வாணையத்தின் கருத்துக்களைக் கோரியிருந்தது. தகவலின்றி பணிக்கு வராமை மற்றும் மாற்றப்பட்ட புதிய இடத்தில் பணியில் சேராமை மூலம் உயர் அதிகாரிகளின் உத்தரவுகளை மதிக்கத் தவறியமை ஆகிய குற்றங்களுக்காக, சென்னை மருத்துவக் கல்வி இயக்குனர் அவர்களால் மேல்முறையீட்டாளருக்கெதிராக தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (அ) - ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குற்றச்சாட்டுக்கள் நிரூபணமாவதாகக் கூறி நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையாக மேல்முறையீட்டாளரின் ஊதிய உயர்வினைத் திரண்ட பயனின்றி ஒரு வருடத்திற்கு நிறுத்தி வைத்து, சென்னை, மருத்துவக் கல்வி இயக்குனர் இறுதி ஆணை பிறப்பித்தார். அத்தண்டனைக்கெதிராக சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டினை அரசு, தேர்வாணையத்தின் கருத்தினைப் பெறும்பொருட்டு தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்தது. வழக்கினை ஆராய்ந்த தேர்வாணையம், இவ்வழக்கில் அளிக்கப்பட்ட தண்டனை, செய்துள்ள குற்றத்திற்கு அதிகமான தண்டனையாக இருப்பதாகக் கருதி, மேற்கூறப்பட்ட ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையை 'கண்டனம்' எனும் தண்டனையாகக் குறைக்கலாம் என கடந்த மார்ச் திங்கள் 1998-ல் அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்து அரசாணை எண். 1159, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 31.08.98 -ல் அரசு உத்தரவு பிறப்பித்தது. கீழ்க்குறிப்பிட்ட காரணத்தை மட்டும் சார்ந்தவாறே, தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறுபட்டு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

<u>வழக்கு - 2</u>

தென்னாற்காடு மாவட்ட ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தில் முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலருக்கெதிராக , அவருடைய பணியில் அலட்சியப் போக்குடனும் கவனக்குறைவாகவும் இருந்ததன் மூலம் திட்டங்களின் நிதிக்கு பண நட்டம் ஏற்படுத்திய குற்றங்களுக்காக, ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு அதன் மீது பிறப்பிக்கப்பட வேண்டிய ஆணைக்காக தேர்வாணையத்தின் கருத்தினை 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசு கோரியிருந்தது. வழக்கைப் பதிவுருக்களுடன் ஆராய்ந்தத் தேர்வாணையம் வழக்கில் காணப்பட்ட சில குறைபாடுகளை அரசுக்குச் சுட்டிக் காட்டி அவைகளை சரி செய்யுமாறும், வழு ஏற்பட்ட இடத்திலிருந்து வழக்கைப் புதிதாகத் தொடருமாறும் 1995ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் கருத்து வழங்கியது. ஆனால், குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.50/- வீதம் ஆறு மாதங்கட்குப் பிடித்தம் செய்யப்பட 06.01.99 நாளிட்ட அரசாணை எண். (1டி) ஊரக வளர்ச்சி 1-ல் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அரசு ஆணை கீழ்க்கண்ட காரணத்தைக் கருத்தில் கொண்டு தேர்வாணையக் கருத்திற்கு மாறுபட்டு ஆணை வெளியிட்டுள்ளது.

1. விசாரணை அலுவலர் தனது அறிக்கையில் அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் நிரூபணமாவதாகத் தெரிவித்துள்ளார். முடிவுரையில் மட்டும் குற்ற அலுவலர் ஓய்வு பெறும் வயதை அடைந்ததால் அவர் மீது கருணை அடிப்படையில் கருத பரிந்துரை செய்துள்ளார். எனவே ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் (Disciplinary Authority) சுயமாக முடிவுகளை எடுத்துள்ளார். மேலும் விசாரணை அலுவலர் தனது அறிக்கையினை 1990ல் அளித்துள்ளார். ஏழு ஆண்டுகள் கடந்த நிலையில் புதிய விசாரணை மேற்கொள்வது ஒழுங்கு நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வருவது மேலும் காலதாமதமாகும். இந்நிலையில் இத்தவறுத் தொடர்பான தேர்வாணையத்தின் கருத்தினை மீறலாம் என அரசு கருதியது.

2. விசாரணை அலுவலரின் அறிக்கையின் நகல் 29.11.95 நாளிட்ட அரசுக் கடிதத்தில் குற்ற அலுவலருக்கு அனுப்பப்பட்டு அவரது மறு விளக்கம் கோரப்பட்டது. பல நினைவூட்டுகள் அனுப்பியும் இதுவரை வரப் பெறவில்லை, தேர்வாணையம் சுட்டிக்காட்டிய இது தொடர்பான தவறு சரிசெய்யயப்பட்டது.

3. அரசு தனது 30.12.93 நாளிட்ட கடிதத்தில் குற்றம் சாட்டப்பட்ட அலுவலரின் (ஓய்வு பெற்றவர்) பணிக்கொடையில் ரூ. 6000/- பிடித்தம் செய்ய விருத்தாச்சலம் கோட்ட வளர்ச்சி அலுவலரின் பிடித்தம் செய்யும் ஆணையினை ரத்துச் செய்து ஆணையிட்டுள்ளது. எனவே தேர்வாணையத்தால் சுட்டிக்காட்டப்பட்ட இத்தவறு சரி செய்யப்பட்டது.

இவ்வழக்கைக் கருணையின் அடிப்படையில் நோக்குமாறு விசாரணை அதிகாரியால் விசாரணை அறிக்கையில் பரிந்துரைச் செய்யப்பட்டிருப்பது ஒழுங்கு நடவடிக்கைக் கையேடு பகுதி III பத்தி 9-ன்படி அமையவில்லை என்பது தேர்வாணையத்தால் கண்டறியப்பட்டது. இக்குறைப்பாடு சரிசெய்யப்படத் தேர்வாணையத்தால் அரசுக்குச் சுட்டிக்காட்டிய போதிலும் தேர்வாணையத்தின் கருத்துக்கு மாறுபட்டு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

<u>வழக்கு - 3</u>

09.08.98 - நாளிட்ட அரசுக் கடிதத்தில் வி.மனுவேலு என்பவர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி-நான்கின் மூலம் இளநிலை உதவியாளராகத் தேர்தெடுக்கப்பட்டு மருத்துவத்துறையில் பணியமர்த்தப் பட்டதாகவும், அவர் பணியில் இருக்கும் போதே எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பிற்கு விண்ணப்பித்து அரசிடமிருந்து மறுப்பின்மைச் சான்றிதழ் பெற்று எம்.பி.பி.எஸ். பட்டம் படித்து, அக்டோபர் மாதம் '96-இல் தனது, எம்.பி.பி.எஸ். பட்டபடிப்பை முடித்து விட்டதாகவும், 28.01.98-இல் சி.ஆர்.ஆர்.ஐ யையும், முடித்து விட்டதாகவும், விண்ணப்பத்தாரர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், விண்ணப்தாரரை 1954 - ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதி 16(பி) யின் பிற்பகுதியின்படி. பணிமாறுதல் மூலம் உதவி மருத்துவராக மருத்துவத்துறையில் பணியமர்த்தத் தேர்வாணைய இசைவு அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

இக்கருத்துருவை மிக்க கவனத்துடன் பரிசீலித்தத் தேர்வாணையம் மனுதாரர் இளநிலை உதவியாளர் பதவியில் இருந்து பணி மாறுதல் மூலம் உதவி மருத்துவர் பதவிக்குச் செல்ல விதிகளில் இடமில்லை என அரசுக்குத் தெரிவித்தது. மேலும், மனுதாரர் எம்.பி.பி.எஸ். பட்டம் முடித்திருப்பதால் தேர்வாணையத்தால் நடத்தப்படும் உதவி மருத்துவர் தேர்விற்கு விண்ணப்பித்து தேர்ச்சி பெறலாம் எனவும் அரசுக்கு கூறப்பட்டது. இருப்பினும், அரசு மனுதாரின் மேல் முறையீட்டு மனுவை பரிசீலித்து தேர்வாணையம் அளித்த கருத்தினை ஏற்று கொள்ளாமல், அரசானை எண். 127, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள் ~~30.08.99-~~ 30.03.99-ன் மூலம் மனுதாரரைப் பணிமாறுதல் மூலம் உதவி மருத்துவராக அவரின் நியமனத்தை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி நியமித்துள்ளது. அவ்வரசாணையில் மனுதாரருக்கு அரசானை வெளியிடப்பட்ட நாளான 30.03.99-லிருந்து ஓய்வு பெற இரணடரை மாதமே உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விதிகளின்படி, இவரை பணிமாறுதல் மூலம் உதவி மருதத்துவராகப் பணியமர்த்த தேர்வாணைய இசைவு அளிக்க இயலாது எனத் தேர்வாணையம் தெரிவித்திருந்தும் , அதிலிருந்து மாறுப்பட்டு அரசு இதனை சிறப்பு நிக்ழ்வாக கருதி நியமித்திருந்தாலும், இந்நியமனம் ஒரு முறையற்ற செயலாகும். இந்நியமனத்தை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு எதிர்காலத்தில் இதே போன்று பலதுறைகளில் இது போன்ற முறையற்ற நியமனங்களுக்குத் தேர்வாணைய இசைவு கோரி விண்ணப்பிக்கப்படலாம். எனவே, இது தவறான முன்னுதாரணம் என அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆ. தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாமை :

அரசு தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்காமல் எந்த வழக்கிலும் செயல்படவில்லை.

இ. அரசின் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர பொதுவாகத் தேர்வாணையத்தின் ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற மரபினை விட்டு விலகி ஆணையிட்டுள்ளது என்பதை வருத்ததுடன் குறிப்பிடுவதோடு எதிர் காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. இப்பொருள் குறித்து, ஐந்து ஆண்டு புள்ளி விவரம் பின் இணைப்பு 11-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஏற்புரை : -

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்குப் போதிய இட வசதி செய்து கொடுத்து மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு பொருப்பாட்சிகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்டத் தேர்வுகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் தேர்வாணையத்தின் அழைப்பினை உடனடியாக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பாராமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்கள் மற்றும் ஆலோசனை வழங்கிய வல்லுநர்கள் ஆகியோருக்கு இத்தேர்வாணையம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரியவேட்பாளர்களைப் பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்டுள்ள துறைத்தேர்வு குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு துறை அரசு செயலாளர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் தேர்வாணையம் தன் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

திரு. து. முருகராஜ், இ.ஆ.ப. (ஓய்வு)	தலைவர்
திரு. ஆர். வேலு, இ.ஆ.ப. (ஓய்வு)	உறுப்பினர்
திரு. ஆர். குருசாமி, பி.ஏ பி. எல்.	உறுப்பினர்
பேராசிரியர் ஜி. அரங்கநாதன், எம். ஏ. , எம்.பில்.	உறுப்பினர்
பேராசிரியர் டாக்டர் எஸ். பாலசுப்பிரமணியன் எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி.,டி.எஸ்.எஸ்.,	உறுப்பினர்
திரு. எம். நாகூர் மீரான், பி.எஸ்..சி., பி.எல்.	உறுப்பினர்
டாக்டர் (திருமதி) ஜோதிபாய் செல்வின்ராஜ் எம்.எஸ்சி., எம்.எட்., பி.எச்.டி.,	உறுப்பினர்
திரு. ஆர். சுந்தரம், பி.ஏ., பி. எல்.,	உறுப்பினர்
திரு. எம்.. மணி, இ.கா.ப. (ஓய்வு)	உறுப்பினர்

தமிழ்நாடு அரசுப் பணியாளர்
தேர்வாணையம், சென்னை - 2.

அசோக் ரஞ்சன் மஉறாந்தி, இ.ஆ.ப.,
செயலாளர்.

நாள் : 27 09. 2000

பின் இணைப்பு - 1

31.3.2000 இல் உள்ளபடி தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல் :

1.	துணைச் செயலாளர்	6
2.	சார் செயலாளர்	41
3.	கணக்கு அலுவலர்	1
4.	உதவிக் கணக்கு அலுவலர்	1
5.	ஆராய்ச்சி அலுவலர்	1
6.	நூலகர்	1
7.	முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர்	2
8.	பிரிவு அலுவலர்	147
9.	உள்ளீடு விளையளவு மேற்பார்வையாளர் (கணிப்பொறி)	1
10.	உள்ளீடு விளையளவு இயக்குபவர் (கணிப்பொறி)	1
11.	அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர் (கணிப்பொறி)	8
12.	கணக்கர்	26
13.	உதவிப் பிரிவு அலுவலர்	250
14.	நேர்முக உதவியாளர்	13
15.	தொலைப்பேசி இயக்குபவர்	2
16.	உதவியாளர்	383
17.	தட்டச்சர்	39
18.	ஊர்தி ஒட்டுநர்	12
19.	பதிவறை உதவியாளர்	2
20.	பதிவறை எழுத்தர்	56
21.	மின் தூக்கி இயக்குபவர்	1
22.	படிப் பெருக்கி இயக்குபவர்	1
23.	முதன்மை ஏவலர்	1
24.	அலுவலக உதவியாளர்	121
25.	காவலர்	6
26.	பெருக்குபவர்	4
27.	துப்புரவுப் பணியாளர்	3
28.	குடிநீர் வைப்பவர்	1

பின் இணைப்பு - II
நேரடித் தேர்வு வெளியிடப்பட்ட முடிவுகள் - ஆண்டு 1999 - 2000

வ. எண்	பதவி, துறை மற்றும் பணியின் பெயர்	விண்ணப்பம் பெற்ற கடைசி நாள்	தெரிவு முடிவுகள் தெரிவிக்கப்பட்ட நாள்	காலியிடங்களின் எண்ணிக்கை						பெறப்பட்ட விண்ணப்பங்கள்	முதனிலைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள்	முதன்மைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள்	வாய்மொழித் தேர்வில் கலந்து கொண்டவர்கள்						இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்						தெரிவு செய்யப்பட்டவர்களின் கல்வி தகுதி	குறிப்பு
				ஆதி	பழ	மிபிவ	பிவ	பொது	கூடுதல்				ஆதி	பழ	மிபிவ	பிவ	மற்ற	கூடுதல்	ஆதி	பழ	மிபிவ	பிவ	மற்ற	கூடுதல்		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)
	மாநிலப் பணிகள்																									
1.	உதவிப் புள்ளியியல் இயக்குநர், தமிழ் நாடு புள்ளியியல் பணி	22 04 98	15 04 99	1	-	1	2	2	6	152	-	95	3	-	3	11	1	18	1	-	1	4	-	6	எம் ஏ (பொரு) - 5 எம் எஸ் சி (கணி) - 1	2 பிவ பொதுப போட்டியில தெரிவுப் பெறறனா
2	உதவி அறுவை மருத்துவர் (பொது) தமிழ் நாடு மருத்துவப் பணி	07 04 98	27 05 99	43	10	51	72	74	250	5062	-	4127	87	10	109	210	17	433	47	9	62	119	12	249	எம்பிபிஎஸ் - 249	4 ஆதி 11 மிபிவ 47 பிவ பொதுப போட்டியில தெரிவுப பெறறனா ஒரு பழஙகுடியினா (பெ) காலியிடம கலவி தகுதி உடைய வேடபாளா கிடைககாமையால நிரபபபபடவிலலை
3.	உரிமையியல் நீதிபதி தமிழ் நாடு மாநில நீதிப்பணி	04 08 98	29 06 99	19	1	15	19	19	73	3370	-	2882	63	-	56	93	4	213	20	-	11	36	1	68	பி எல - 60 எல எல பி - 4 எம் எல் - 4	1 ஆதி 17 பிவ பொதுப போட்டியில தெரிவுப பெறறனா 4 மிபிவ ஒரு பழஙகுடியினா காலியிடம நிரபபபபடவிலலை
4.	குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சமூக நலத்துறை தமிழ் நாடு பொதுப்பணி	22 07 98	5 07 99	-	-	-	1	-	1	295	-	157	-	-	-	2	-	2	-	-	-	1	-	1	பி எஸ் சி (சத்துணவு மறறும உணவுக்கட்டுபாடு)-1	
5.	விரிவுரையாளர் மருந்தியல் தமிழ் நாடு மருத்துவப் பணி	16 12 98	30 08 99	1	-	-	-	-	1	7	-	3	3	-	-	-	-	3	1	-	-	-	-	1	எம எஸ சி (சூழ்நிலை டெக்சாகாலிஜி) - 1	
6.	உணவுக் கட்டுப்பாட்டாளர் அரசு மருத்துவ மனைகள் தமிழ் நாடு மருத்துவப்பணி	06 01 99	2 10 99	1	-	-	1	1	3	237	-	136	3	-	1	4	1	9	1	-	-	2	-	3	எம் எஸ் சி - 1 பி எஸ் சி - 2	1 பிவ பொதுப போட்டியில தெரிவுப பெறறனா
7	உதவி ஆய்வாளர் தொழிற்சாலைகள், தமிழ் நாடு தொழிற்சாலைப்பணி	30 12 98	22 12 99	3	-	3	4	4	14	1237	-	878	10	-	10	18	1	39	4	-	3	6	1	14	பி இ - 11 ஏ எம் ஐ இ - 1 பி டெக - 2	1 ஆதி 2 பிவ பொதுப போட்டியில தெரிவுப பெறறனா
8.	தொழிலாளர் அலுவலர், தமிழ் நாடு தொழிலாளர் நலப்பணி	06 01 99	20 01 00	1	-	1	1	-	3	746	-	501	2	-	3	3	-	8	1	-	1	1	-	3	எம் ஏ - 3	
9.	ஆய்வாளர் கொதிகலன்கள், தமிழ் நாடு கொதிகலன் பணி	06 01 99	21 01 00	1	-	-	1	1	3	99	-	36	3	-	1	5	-	9	1	-	1	1	-	3	ஏ எம ஐ இ - 1 பி இ - 2	1 மிபிவ பொதுப போட்டியில் தெரிவுப பெற்றா
10.	உரிமையியல் நீதிபதி, தமிழ் நாடு மாநில நீதிப்பணி	12 05 99	09 02 00	9	2	13	14	14	52	2344	-	2337	30	-	49	65	3	147	9	-	18	22	1	50	பி எல - 41, எம் எல-4, எல எல் பி -5	5 மிபிவ மறறும,8 பிவ பொதுப் போட்டியில தெரிவு பெற்றனர், 2 பழஙகுடியினா காலியிடம நிரப்பப்படவிலலை
11.	உதவி மருத்துவ அலுவலர் (ஓமியோபதி) தமிழ்நாடு மருத்துவப்பணி	24 09 98	22 02 00	1	-	1	3	2	7	303	-	182	3	-	5	12	1	21	1	-	2	4	-	7	பிஎசஎமஎஸ் - 7	1 மிபிவ 1 பிவ பொதுப் போட்டியில தெரிவுப பெறறனர்

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)
	II. சார்நிலைப்பணி																									
12.	தொகுதி ஏழுபணிகள் நிர்வாக அலுவலர் நிலை - I மற்றும் III தமிழ் நாடு இந்து சமய அறநிலைய சார்நிலைப்பணி	27 10 97	03 04 99	6	-	7	11	13	37	6460	6381	285	11	-	21	36	-	68	6	-	10	21	-	37	பிஎல-17, எமஎஸசி- 4 எமஎஸசிபிஎட - 1 எமஏ - 6 பிஎஸசி-5 எமஏ பிஎட-1 பிஎஸ சி,பிஎட-1 பிஏ-1 பிஎஸசி பிஎட பிஎலஎல-1	3 மிபிவ, 10 பிவ பொதுப் போடடியில தெரிவுப் பெற்றனர்
13.	தொகுதி எட்டு பணிகள் நிர்வாக அலுவலர் நிலை IV தமிழ்நாடு இந்துசமய அறநிலைய சார்நிலைப்பணி	27 10 97	13 04 99	11	1	13	18	19	62	30965	-	484	36	3	51	96	-	186	13	1	18	30	-	62	முதுகலைப்பட்டம-26 இளநிலைபபட்டம-29 மேலநிலைபபளளி-5 உயர்நிலைப்பளளி-2	2 ஆதி, 5 மிபிவ, 12 பிவ பொதுப போட்டியில் தெரிவுப் பெற்றனா
14.	காட்சிக் கூட விளக்குனர் (பொதுப்பிரிவு) அரசு அருங்காட்சியகம் தமிழ்நாடு பொதுச்சார்நிலைப்பணி	22 07 98	26 05 99	-	-	-	-	-	1	184	-	96	-	-	2	1	-	3	-	-	1	-	-	1	எம்ஏ - 1	
15.	தொகுதி நான்கு பணிகள் (சுருக்கெழுத்து தட்டச்சர்) தமிழ்நாடு அமைச்சுப் பணி / தமிழ்நாடு நீதித்துறை அமைச்சு பணி (தனிததோவு)	28 08 98	29 05 99	141	-	-	-	-	141	844	-	327	-	-	-	-	-	-	139	-	-	-	-	139	எஸ எஸ் எல சி மற்றும தஅசசு சீனியர் கிரேடு ஆங்கிலம் மற்றும் தமிழ - 139	2 ஆதி திராவிடாகளுக்கான காலியிடம கல்வி தகுதி உடைய வேட்பாளா கிடைககாமையால நிரப்பபபடவில்லை
16	உதவி காப்பாட்சியர் (இயற்கைக் கலைக்கூடம்)அரசு அருங்காட்சியகம் தமிழ்நாடு பொதுச்சார்நிலைப்பணி	22 07 98	05 07 99	-	-	-	-	-	1	232	-	121	-	-	-	2	-	2	-	-	-	1	-	1	எம்ஏ - 1	
17	அறிவியியல் உதவியாளர் நிலை இரண்டு தமிழ்நாடு தடய அறிவியியல் சார்நிலைப் பணி	08 01 97	19 07 99	9	1	11	16	16	53	1001	-	582	28	-	44	81	3	156	9	-	16	27	-	52	எம் எஸ சி (வேதி)-34 எம எஸ சி (தாவர)-1 எம எஸ.சி (வில) - 8 எம் எஸ சி (இயற்) -8 எம எஸ சி (த அ)-1	5 மிபிவ 11 பிவ பொதுப் போட்டியில தெரிவுப பெறறனர் ஒரு பழஙகுடியினருககான காலியிடம் கல்வி தகுதி உடைய வேட்பாளா கிடைககாமையால நிரபபப்படவிலலை
18.	விவரங்கள் பதிவு செய்பவர் கணிப்பொறிப் பிரிவு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்	21 01 98	06 09 99	2	-	1	2	3	8	441	-	126	6	-	4	11	-	21	2	-	2	4	-	8	பிஎஸ்சி - 2 பிஎஸசி பிஎட-1 பிகாம-1 எசஎஸசி-1 பிகாம பிஜிடிசிஏ-1 பிகாம பிஜிடிபிஏ-1 எமஏ பிஜிடிசிஏ-1	1 மிபிவ, 2 பிவ பொதுப போடடியில தெரிவுப் பெற்றனா
19.	துளையிடும் உதவியாளர், தமிழ்நாடு புவியியல் மற்றும் சுரங்கச் சார்நிலைப்பணி	02 12 98	03 01 00	-	-	-	-	-	2	301	-	167	-	-	-	4	-	4	-	-	-	2	-	2	எமஎஸசி (வில) - 2	
20.	இளநிலைப் பொறியாளர் (தொழில்கள்), தமிழ்நாடு தொழில் சார்நிலைப் பணி	21 01 98	06 01 00	-	-	-	1	1	2	242	-	98	-	-	-	5	-	5	-	-	-	2	-	2	டிஎம்இ -2	1 பிவ பொதுப் போடடியில் தெரிவுப பெற்றனர்
21	இளநிலை கட்டிடக் கலைஞர், தலைமைப் பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை	07 10 98	12 01 00	1	-	-	-	-	1	11	-	7	3	-	-	-	-	3	1	-	-	-	-	1	பிஆர்க் - 1	
22.	ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் -I	29 04 97	25 01 00	109	4	114	177	198	602	56209	50995	5093	-	-	-	-	-	2245	118	5	167	296	16	602	பிஎஸ்சி-77 பிஏ-64 பி,காம,-102 பிலிட-2 எம்ஏ-126 எம் எஸ சி-84 எம் காம,-79, பி எஸ சி (வே)-15, எம எஸ சி(வே)-5 பி எஸ சி (தோட)-6 பி எல்-23, எம எல் -1 பி எல் எம் -2 பிஇ -2 பி ஏ (கூடடு)-10 எம ஏ (கூட்டு)-4	9 ஆதி 1 பழ 51 மிபிவ, 119 பிவ பொதுப போட்டியில் தெரிவு பெற்றனர்

